வீழ்ச்சியடைந்தன. கட்டில்/அறை விகிதம் 1982இன் 1.7இலிருந்து 1983இல் 1.65க்கு வீழ்ச்சியடைந்தது. எடுக்கப்பட்ட ஒவ்வொரு 100 அறைகளிலும் 165 விருந்தினர்கள் தங்கியுள்ளனர் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது. தரப் படுத்தப்பட்ட வதிவிடத்துறையில் தேவையை விஞ்சிய கொள்ளளவு காணப்படு வதை நோக்கில்கொண்டு அரசு புதிய விடுதிச் செயற்றிட்டங்களுக்கு வழங்கப் படும் இறை ஊக்குவிப்புக்களை (வரிவிடுப்பு, கருவிகளை தீர்வையின்றி இறக்குமதி செய்தல் போன்ற) 1983 ஏப்பிரலில் இருந்து நிறுத்திக்கொண்டது. இதற்கு இசைவாக இத்துறைக்கான மத்திய வங்கியின் மீள்நிதியிடல் வசதிகளும் முதலீடு களை கட்டுப்படுத்துவதற்காக குறைக்கப்பட்டன. கலவரத்தைத் தொடர்ந்து சுற்றுலாப்போக்குவரத்தின் வீழ்ச்சியால் தரப்படுத்தப்பட்ட வதிவிடத்துறை மிகவும் கடுமையாக பாதிப்படைந்தவேளையில் சில தங்கும் விடுதிகள் நிதி நிலைமை களின் ஆற்றலைப் பாதுகாப்பதன் பொருட்டு ஓரளவு மூடவேண்டியும் ஊழியர்களை குறைக்கவேண்டியும் இருந்தன. பல விடுதிகள் கடுமையான நிதிப் பிரச்சனைகளை எதிர்நோக்கின.

இலங்கையில் சுற்றுலாத்துறையை பழைய நிலைக்குக் கொண்டுவரும்பொருட்டு அரசு நாட்டிற்கு பயணிகளை கவர்வதற்காக வெளிநாடுகளில் பரந்தளவு விளம் பரப் பிரசாரத்தை மேற்கொள்வதன்மீது செலவிடுவதற்காக ரூ. 400 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது. நடவடிக்கைகளில் வீழ்ச்சியேற்பட்டதன் விளைவால் கைத்தொழில் எதிர்நோக்கிய இடர்களை தணிக்கும் ஒரு முயற்சியாக சுற்றுலாத்துறைக்கான வியாபார விற்பனை வரிவீதத்தை 15 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அரசு குறைத்துக்கொண்டது. குறுகிய சந்தையை நம்பியிருப்பதைத் தவிர்ப்பதற்காக சுற்றுலாப் போக்குவரத்தின் வளத்தினை திசை திருப்புவதற்கு புதிய அபிவிருத்தி உபாயமொன்று வகுக்கப்பட்டு வருகிறது. இதுவரை இலங்கையைக் கடந்து சென்ற சந்தையின் மேல்மட்ட வருவாய் துறையினரைக் கவர்வதற்காகவும் பெருமளவு வருவாய்களை உருவாக்குகின்ற சிறப்பான ஈடுபாடுகளையும், போக்கு வரத்து உடன்படிக்கைகளையும் ஊக்குவிப்பதற்கான திட்டங்களும் வகுக்கப்பட் டுள்ளன.


## சென்மதி நிலுவை

### சென்மதி நிலுவைச் செயலாற்றம்

1983இல் வர்த்தக நியதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்ட துடன், தொழில்புரிவோர் பணவனுப்பல்களில் மேலும் அதிகரிப்பு ஏற்படவே சிஎஉ நியதிகளில் நடைமுறைக்கணக்குக் குறையில் கணிசமானளவு குறைப்புக் காணப்பட்டது. நடைமுறைக்கணக்குக் குறை இவ்வாண்டில் ரூ. 111,850 இலட் சம் (சிஎஉ 4,450 இலட்சம்) ஆகக் காணப்பட்டதுடன் ஒப்பிடுகையில் 1982இல் இது ரூ. 119,190 இலட்சம் (சிஎஉ 5,190 இலட்சம்) ஆகவிருந்தது. மீளாய்விற் குரிய ஆண்டில் 1982இன் பாதகமான சென்மதி நிலுவை நிலைக்கான காரணி களில் மீளாய்விற்குரிய ஆண்டில் முக்கியமானதொரு மாற்றம் ஏற்பட்டது. 1977 முதல் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து கொண்டிருந்த வர்த்தக மாற்று விகிதம் இலங்கையின் முக்கிய பெருந்தோட்ட ஏற்றுமதிகளின் விலைகளில் ஏற்

# செனமதி நிலுவை

ஆண்டுதோறும்




இலங்கை மத்திய வங்கி

பட்ட எழுச்சியினுலும் எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினுலும், இலங்கைக்குச் சாதகமாக முன்னேற்றமடைந்தது. சிஎஉ நியதிகளில் அளவிடுகையில் ஏற்றுமதிகள் 7.6 சதவீதத்தால் வளர்ச்சியடைய இறக்குமதிகள் 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1982 உடன் ஒப்புநோக்குகையில் ஏற்றுமதிகளில் மந்தமான வளர்ச்சியும் இறக்குமதிகளில் விரைவுத்தன்மையும் காணப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குக்குறை 1982இல் 11.9 சதவீதத்திலிருந்து 1983இல் 9.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அலுவல்சார் மாற்றல் நீங்கலாக நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறை ரூ. 152,010 இலட்சமாக (சிஎஉ 6,050 இலட்சம்) இருந்ததுடன், 1982உடன் ஒப்பிடுகையில் இது ரூ. 152,980 இலட்சம் (சிஎஉ 6,660 இலட்சம்) ஆகவிருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான நடைமுறைக்கணக்கு விகிதம் இவ்விரண்டு ஆண்டுகளுக்குமிடையில் 15.3 சதவீதத்திலிருந்து 12.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

வணிக ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1982இல் ரூ. 210,980 இலட்சங்களிலிருந்து (சிஎஉ 9,180 இலட்சம்) 1983இல் ரூ. 249,170 இலட்சங்களுக்கு (சிஎஉ 9,880 இலட்சம்) சிஎஉ நியதிகளில் 7.6 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தன. மிகவும் சாதகமான விலைகளின் காரணமாக மொத்த ஏற்றுமதி வருவாய்களில் கணிசமானளவு அதிகரிப்புக் காணப்பட்டது. ஒப்புநோக்குகையில் 1982இன் மரபுரீதியான பெருந்தோட்டத்துறையின் ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட 6.9 சதவீத வீழ்ச்சிக்கு எதிராக 1983இல் 18.5 சதவீத அதிகரிப்புக் காணப்பட்டது. மரபுரீதியற்ற ஏற்றுமதி வருவாய்கள் (பெற்றேலிய உற்பத்தி தவிர்ந்த) 5.7 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு புடவை, தைக்கப்பட்ட ஆடைகள், இரத்தினக்கற்கள் ஆகியவற்றின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரித்த அதிகரிப்பே முழுக்காரணமாகும்.

சிஎஉ நியதிகளில் வணிக இறக்குமதிகளில் ஏற்படும் செலவுகள் 1 சதவீதத்தால் சிறிதளவில் வீழ்ச்சியுற்றன. 1983ஆம் ஆண்டிற்கான இறக்குமதிகளில் ஏற்பட்ட மொத்தச் செலவுகள் கடந்த ஆண்டின் ரூ. 415,010 இலட்சத்துடன் (சிஎஉ 18,080 இலட்சம்) ஒப்பிடுகையில் ரூ. 452,210 இலட்சமாக (சிஎஉ 17,960 இலட்சம்) விளங்கின. எனினும், இறக்குமதிகளில் ஏற்பட்ட சிறிதளவு வீழ்ச்சியைத் தொடர்ந்து இடைநிலைப் பொருட்களிலிருந்தும் முதலீட்டுப் பொருட்களிலிருந்தும் நுகர்ச்சிப்பொருட்களுக்கு ஓர் பெயர்ச்சி காணப்பட்டது. 1982உடன் ஒப்பிடுகையில் நுகர்வுப்பொருட்களின் செலவுகள் 26 சதவீதத்தினுல் அதிகரித்திருந்தவேளையில் இடைநிலைப்பொருட்களில் (பெற்றேலியம் தவிர்ந்த ஏனையவை) ஏற்பட்ட செலவுகள் 6 சதவீதத்தால் அதிகரித்தன. பெற்றேலியம் முதலீட்டுப் பொருட்களிலான செலவுகள் முறையே 18 சதவீதத்தாலும் 5 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

அட்டவணை 1.41

## சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை 1979 — 1983

| விடயம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | சி. எ. உ. பத்து இலட்சம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1979 | 1980 | 1981(அ) | 1982(அ) | 1983(ஆ) | 1979 | 1980 | 1981(அ) | 1982(அ) | 1983(ஆ) |
| 1. வணிகப் பொருட்கள் ... | — 7,288 | —16,312 | —15,616 | —20,403 | —20,304 | — 362 | — 758 | — 693 | — 890 | — 808 |
| ஏற்றுமதி ... | 15,282 | 17,603 | 20,507 | 21,098 | 24,917 | 759 | 818 | 903 | 918 | 988 |
| இறக்குமதி ... | —22,570 | —33,915 | —36,123 | —41,501 | —45,221 | — 1,121 | — 1,576 | — 1,596 | —1,808 | — 1,796 |
| 2. பணிகள் ... | + 739 | + 859 | + 82 | — 389 | — 1,297 | + 37 | + 40 | + 4 | — 16 | — 52 |
| பெறுகைகள் ... | 2,992 | 4,605 | 6,019 | 6,962 | 7,959 | 149 | 214 | 265 | 303 | 317 |
| கொடுப்பனவுகள் .. | — 2,253 | — 3,746 | — 5,937 | — 7,351 | — 9,256 | — 112 | — 174 | — 261 | — 319 | — 369 |
| 3. பொருட்களும் பணிகளும் (1+2) .. | — 6,549 | —15,453 | —15,534 | — 20,792 | —21,601 | — 325 | — 718 | — 689 | — 906 | — 860 |
| 4. மாற்றல்கள் (தேறிய) .. | + 2,993 | + 4,541 | + 7,036 | + 8,873 | +10,416 | + 148 | + 211 | + 308 | + 387 | + 415 |
| தனியார் (தேறிய) .. | 754 | 2,260 | 3,918 | 5,494 | 6,400 | 37 | 105 | 172 | 240 | 255 |
| அலுவல்கள் (தேறிய) .. | 2,239 | 2,281 | 3,118 | 3,379 | 4,016 | 111 | 106 | 136 | 147 | 160 |
| 5. நடைமுறைக்கணக்கு நிலுவை (3+4) ... | — 3,556 | —10,912 | — 8,493 | —11,919 | —11,185 | — 177 | — 507 | — 381 | — 519 | — 445 |
| 6. நாணயமல்லா மூலதனம் ... | + 3,306 | + 6,585 | + 7,691 | +10,813 | +10,797 | + 164 | + 306 | + 341 | + 471 | — 428 |
| தனியார்துறை ... | 874 | 3,981 | 2,571 | 5,516 | 3,389 | 43 | 185 | 116 | 240 | 136 |
| அரசதுறை ... | 2,432 | 2,604 | 5,120 | 5,297 | 7,408 | 121 | 121 | 225 | 231 | 292 |
| நீண்டகாலம் (தேறிய) ... | 2,432 | 2,604 | 5,120 | 5,297 | 7,410 | 121 | 121 | 225 | 231 | 292 |
| பெறுகைகள் ... | (3,351) | (4,326) | (6,087) | (6,814) | (9,256) | (167) | (201) | (267) | (298) | (365) |
| கடன் தீர்ப்பனவுகள் ... | (—919) | (—1,722) | (—967) | (—1,517) | (—1,846) | (—46) | (—80) | (—42) | (—67) | (—73) |
| குறுகிய காலம் (தேறிய) ... | — | — | — | — | — 2 | — | — | — | — | — |
| 7. பெறுமதி சீராக்கங்கள் ... | — 18 | + 607 | — 39 | — 124 | + 82 | — | — | — | — | — |
| 8. பிழைகளும் தவிர்ப்புக்களும் ... | + 820 | + 495 | + 188 | + 81 | + 692 | + 36 | + 23 | + 2 | + 24 | + 16.5 |
| 9. சி. எ. உ. ஒதுக்கீடுகள் ... | 241 | 258 | 252 | — | — | 12 | 12 | 12 | — | — |
| 10. மொத்த நிலுவை ... | + 793 | — 2,967 | — 406 | — 1,149 | + 296 | + 35 | — 116 | — 26 | — 24 | 0.5 |
| 11. நாணய அசைவுகள் (-மிகை) ... | — 793 | + 2,967 | + 406 | + 1,149 | -- 296 | — 35 | + 166 | + 26 | + 24 | + 0.5 |
| சராசரி செலாவணி வீதம் - இ.ரூ./சி.எ.உ. .. | | | | | | 20.13 | 21.52 | 22.67 | 22.98 | 22.16 |

(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானது

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு. நாணயத்துறையிலுள்ள எல்லா கொடுக்கல் வாங்கல்களும் கால முடிவு வீதங்களில் மாற்றப்படுகின்றன.

## அட்டவணை 1.42

### பணிகளும் மாற்றல்களும் 1982—1983

ரூ. பத்து இலட்சம் (சிஎஉ பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| விடயம் | வரவு | | | பற்று | | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1982 (அ) | 1983 (ஆ) | மாற்றம் 1982/83 | 1982 (அ) | 1983 (ஆ) | மாற்றம் 1982/83 | 1982 | 1983 |
| துறைமுகம், போக்குவரத்து, காப்புறுதி... | 1,219 (53) | 1,589 (63) | + 370 (+10) | 977 (42) | 1,318 (52) | + 341 (+10) | + 242 (+11) | + 271 (+11) |
| பயணம் ... | 2,678 (116) | 2,391 (96) | — 287 (—20) | 842 (37) | 911 (36) | — 69 (—1) | + 1,836 (+79) | + 1,480 (+60) |
| முதலீட்டு வருவாய் | 912 (40) | 1,045 (42) | + 133 (+2) | 2,946 (128) | 4,209 (169) | + 1,263 (+41) | — 2,034 (—88) | — 3,164 (—127) |
| 1 இலாபங்களும் பங்கிலாபங்களும் ... | 7 (—) | 3 (—) | — 4 (—) | 218 (9) | 246 (10) | 28 (+1) | — 211 (—9) | — 243 (—10) |
| 2 வட்டி ... | 905 (40) | 1,042 (42) | + 137 (+2) | 2,728 (119) | 3,963 (159) | + 1,235 (+40) | — 1,823 (—79) | — 2,921 (—117) |
| அரச செலவினம் ... | 273 (12) | 361 (14) | + 88 (+2) | 295 (13) | 292 (11) | — 3 (—2) | — 22 (—1) | + 69 (+3) |
| பல்வகை ... | 1,880 (82) | 2,573 (102) | + 693 (+20) | 2,291 (99) | 2,526 (101) | + 235 (+2) | — 411 (—17) | + 47 (+1) |
| மொத்த பணிகள் ... | 6,962 (303) | 7,959 (317) | + 997 (+14) | 7,351 (319) | 9,256 (369) | + 1,905 (+50) | — 389 (—16) | — 1,297 (—52) |
| தனியார் மாற்றல்கள் ... | 6,024 (263) | 6,857 (273) | + 833 (+10) | 530 (23) | 457 (18) | — 73 (—5) | + 5,494 (+240) | + 6,400 (+225) |
| அலுவல்சார் மாற்றல்கள் ... | 3,379 (147) | 4,016 (160) | + 637 (+13) | — (—) | — (—) | — (—) | + 3,379 (+147) | + 4,016 (+160) |
| மொத்த மாற்றல்கள் ... | 9,403 (410) | 10,873 (433) | + 1,470 (+23) | 530 (23) | 457 (18) | — 73 (—5) | + 8,873 (+387) | + 10,416 (+415) |
| மொத்த பணிகளும் மாற்றல்களும் ... | 16,365 (713) | 18,832 (750) | + 2,467 (+37) | 7,881 (342) | 9,713 (387) | + 1,832 (+45) | + 8,484 (+371) | + 9,119 (+363) |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

சென்மதி நிலுவைகளின் பணிகள் கணக்கில் உள்ள பற்றுக்குறை 1982ஆம் ஆண்டின் ரூ. 3.890 இலட்சத்திலிருந்து (சிஎஉ 160 இலட்சம்) 1983இல் ரூ. 12,970 இலட்சத்துக்கு (சிஎஉ 520 இலட்சம்) விரிவடைந்தது. இந்த விரிவுபடுத்தப்பட்ட பற்றுக்குறையானது, சுற்றுலாத்துறையிலிருந்து கிடைக்கும் வெளிநாட்டு நாணய மாற்றுப் பெறுகைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவிலும் வெளிநாட்டுக் கடன் களின் ஏனைய பணிக்கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வட்டி அதிகரிப்பிலுமே பெரு மளவில் ஏற்பட்டது.

வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டிக்கொடுப்பனவுகள், பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகள் வர்த்தகக் கடன்கள் என்பன 34 சதவீதத்தால் அதிகரித்து. 1982இல் ரூ. 27,280 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1,190 இலட்சம்) 1983இல் ரூ. 39,630 இலட்சமாக (சிஎஉ 1,580 இலட்சம்) விளங்கியது. வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டிக்கொடுப்பனவுகள் 1982ஆம் ஆண்டின் 8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1983இன் பொருட்கள் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகைகளில் 10 சதவீதத்தினை ஈர்த்துக்கொண்டது.

வெளிநாட்டுச் சொத்துக்களின் முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வட்டி வரு வாய்கள் ரூ. 10,420 இலட்சத்துக்கு (சிஎஉ 420 இலட்சம்) வகைகூறியதுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டில் ரூ. 9,050 இலட்சமாக (சிஎஉ 400 இலட்சம்) இருந்தது. வட்டிக் கொடுக்கல் வாங்கல்களின் மீதான பற்றுக்குறை மட்டும் 1982இன் ரூ. 18,230 இலட்சத்தில் (சிஎஉ 790 இலட்சம்) இருந்து 1983இல் ரூ. 29,210 இலட்சத்திற்கு (சிஎஉ 1,170 இலட்சம்) அதிகரித்தது. இலாபங்களி லும் பங்கிலாபங்களிலும் ஏற்பட்டுள்ள கூடிய வெளிப்பாய்ச்சல்களின் விளைவாக "முதலீட்டு வருவாய்" என்ற வகையில் உள்ள பற்றுக்குறை 1983ல் ரூ. 11,300 இலட்சத்தினல் (சிஎஉ 390 இலட்சம்) அதிகரித்தது. வெளிநாட்டுப் படுகடன் களின் விளைவாக வளர்ந்துவரும் வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டுகளில் குறிப்பிட்டதுபோன்றே தொடர்ந்தும் இருந்துவந்தன. வெளிநாட்டுப் படுகடன் நிவர்த்தி செய்வதற்காக ஒதுக்கப்படும் நாட்டின் வெளிநாட்டு மூலவளங்களின் அதிகரித்த டங்கு மிகவும் கவனத்திற்குரிய ஒன்றாகும்.

பணிகள் கணக்கில் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் முக்கிய மூலங் களாயிருந்த துறைமுகம், போக்குவரத்து, காப்புறுதி, சுற்றுலா என்பன ரூ. 14,110 இலட்சத்திற்கு (சிஎஉ 710 இலட்சம்) வகைகூறின. துறைமுகம், போக்குவரத்து' காப்புறுதி ஆகியவற்றிலிருந்தான தேறிய பெறுகைகள் கடந்த ஆண்டின் அதே நிலையில் மாறாது இருந்த வேளையில் சுற்றுலாத் துறையில் இருந்தான பெறுகை கள் வீழ்ச்சியடைந்தன. யூலை கலவரங்களின் பின்னர் சுற்றுலாத்துறையில் ஏற் பட்ட வீழ்ச்சியின் விளைவாக சுற்றுலாத் துறையிலிருந்தான மொத்த வருவாய் கள் 17 சதவீதத்தால் 1982இன் ரூ. 26,780 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1,160 இலட் சம்) 1983இல் ரூ. 23,910 இலட்சத்திற்கு (சிஎஉ 960 இலட்சம்) வீழ்ச்சியடைந் தன. மறுபுறத்தில் வெளிநாட்டுக்கு பயணமாகும் வதிவோரினால் ஏற்படுத்தப் பட்ட செலவினம், சிஎஉ நியதிகளில் ஒரு சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டியது.

இதன் விளைவாக கடந்த ஆண்டில் ரூ. 18,360 இலட்சத்துடன் (சிஎஉ 790 இலட்சம்) ஒப்பிடுகையில் 1983இன் சுற்றுலாத் துறையின் தேறிய வருவாய்கள் ரூ. 14.800 இலட்சமாக (சிஎஉ 600 இலட்சம்) விளங்கின.

கடந்த சில ஆண்டுகளில் இருந்தமை போன்று வெளிநாடுகளிலிருந்து தொழில் புரிவோர் பணவனுப்பல்களை உள்ளடக்கிய தனியார் மாற்றல்களில் இருந்தான பெறுகைகள் மீளாய்விற்கான ஆண்டிலும் பெருமளவில் அதிகரித்திருந்தன. எனினும் இம்மூலத்திலிருந்தான பெறுகைகளில் குறைவடைந்த தன்மை காணப்பட்டபோதும் 1982ஆம் ஆண்டின் 35 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் 1983இல் 4 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. தனியார் மாற்றல்களிலிருந்தான மொத்தப் பெறுகைகள் ஆண்டுக் காலத்தில் 1982இன் ரூ. 60,240 இலட்ச (சிஎஉ 2,630 இலட்சம்) மட்டத்திலிருந்து ரூ. 68,570 இலட்சத்தினை (சிஎஉ 2,730 இலட்சம்) அடைந்திருந்த வேளையில் தேறிய பெறுகைகளும் 1982இன் ரூ. 54,940 இலட்சத்திலிருந்து (சிஎஉ 2,400 இலட்சம்) 1983இல் ரூ, 64,000 இலட்சத்திற்கு (சிஎஉ 2,550 இலட்சம்) அதிகரித்திருந்தன. தனியார் மாற்றல்கள் வணிகத்துறைப் பொருட்களிலும் பணிகள் துறைகளிலும் ஏற்பட்ட பற்றுக் குறையின் குறிப்பிட்ட ஒரு நிலைக்கு ஈடுசெய்வதற்கு உதவும் முக்கியமானதொரு விடயமாக விளங்குகின்றன,

செயற்றிட்டக் கொடை வழங்கல்கள் உணவுக்கொடை வழங்கல்கள் மற்றும் ஏனைய பண்டக்கொடை வழங்கல்களைக்கொண்ட அலுவல்சார் மாற்றல்கள் 1982இன் ரூ. 33,790 இலட்சத் (சிஎஉ 1,470 இலட்சம்) திலிருந்து 1983இல் ரூ. 40,610 இலட்சமாக (சிஎஉ 1,600 இலட்சம்) அதிகரித்தது. செயற்றிட்டக் கொடை வழங்கல்கள் மொத்தக்கொடை வழங்கல் பெறுகைகளில் 58 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் உணவு மற்றும் ஏனைய கொடை வழங்கல்கள் மிகுதிக்கு வகை கூறின. அவசரகால நிவாரண உதவித்தொகை வடிவில் இவ்வாண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் பெறப்பட்ட கொடை வழங்கலின் தொகை ரூ, 2,880 இலட்சமாக (சிஎஉ 110 இலட்சம்) இருந்தது.

தனியார் அலுவல்சார் மாற்றல்கள் தொடர்பான மிகையானது 1982இன் ரூ. 88,730 இலட்சத்திலிருந்து (சிஎஉ 3,870 இலட்சம்) 1983இல் ரூ. 104,160 இலட்சமாக (சிஎஉ 4,150 இலட்சம்) அதிகரித்ததுடன் பொருட்கள் பணிகள் கணக்குகளில் ஏற்பட்ட பற்றுக்குறையினை ஈடுசெய்வதற்காக கணிசமானளவிற்கு உதவிபுரிந்தன. இவ்வாண்டிற்கான நடைமுறைக் கணக்குப் பற்றுக் குறையானது ரூ, 111,850 இலட்சமாக (சிஎஉ 4,450 இலட்சம்) இருந்ததுடன் வணிக வர்த்தகக் கணக்கினைத் தனியாக ஒப்பிட்டு நோக்குகையில் ரூ. 216,010 இலட்சக் (சிஎஉ 8,600 இலட்சம்) குறையினைக் கொண்டு விளங்குகின்றது. கடந்த ஆண்டில் உள்ளவாறு நடைமுறைக் கணக்கிலுள்ள பற்றுக் குறையானது பெருமளவில் நேரடி முதலீடுகள், நீண்டகால, நடுத்தரகால உதவிக் கடன்கள், வர்த்தகக் கடன்பாடு மற்றும் குறுங்கால கடன்கள் மூலம் நிதியிடப்பட்டன.

## அட்டவணை 1.43

### வெளிநாட்டு மூலவளங்களின் இடைவெளிக்கான நிதியிடல் 1981 — 1983

| வகை | ப. இ. ரூபாய்களில் | | | சி. எ. உ. பத்து இலட்சம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1981 (அ) | 1982 (அ) | 1983 (ஆ) | 1981 (அ) | 1982 (அ) | 1983 (ஆ) |
| 1. வெளிநாட்டு வருவாய்கள் .. | **30,956** | **34,084** | **39,733** | **1,363** | **1,484** | **1,578** |
| 1. 1 ஏற்றுமதிகள் .. | 20,507 | 21,098 | 24,917 | 903 | 918 | 988 |
| 1. 2 பணிகள் ... | 6,019 | 6,962 | 7,959 | 265 | 303 | 317 |
| 1. 3 தனியார் மாற்றல்கள் ... | 4,430 | 6,024 | 6,857 | 195 | 263 | 273 |
| 2. வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் ... | **56,339** | **63,458** | **72,493** | **2,487** | **2,765** | **2,890** |
| 2. 1 இறக்குமதிகள் ... | 36,123 | 41,501 | 45,221 | 1,596 | 1,808 | 1,796 |
| 2. 2 பணிகள் ... | 5,937 | 7,351 | 9,256 | 261 | 319 | 369 |
| 2. 3 தனியார் மாற்றல்கள் ... | 512 | 530 | 457 | 23 | 23 | 18 |
| 2. 4 மூலதன மீள் கொடுப்பனவுகள் ... | 13,767 | 14,076 | 17,559 | 607 | 615 | 707 |
| 3. வெளிநாட்டு மூலவளங்களின் இடைவெளி ... | **— 25,383** | **—29,374** | **—32,760** | **— 1,124** | **— 1,281** | **— 1,312** |
| 4. மூலவளங்களின் இடைவெளிக்கான நிதியிடல் .. | **+25,383** | **+29,374** | **+32,760** | **+ 1,124** | **+ 1,281** | **+ 1,312** |
| 4. 1 படுகடன் நிலையினைப் பாதிக்காத கொடுக்கல் வாங்கல்களுக்கூடான நிதியிடல் .. | 4,373 | 4,756 | 4,943 | 192 | 207 | 197 |
| 4. 1.1 அலுவல்சார் கொடை வழங்கல் | 3,118 | 3,379 | 4,016 | 136 | 147 | 160 |
| 4. 1.2 நேரடி முதலீடுகள் .. | 1,003 | 1,377 | 927 | 44 | 60 | 37 |
| 4. 1.3 சிஎஉ ஒதுக்கீடுகள் .. | 252 | — | — | 12 | — | — |
| 4. 2 மூலவளங்களின் கடன்பாடுகளும் பயன்பாடும் .. | 20,861 | 24,661 | 27,134 | 930 | 1,050 | 1,098 |
| 4. 2.1 நீண்ட காலக் கடன்கள் | 5,350 | 5,987 | 7,329 | 234 | 262 | 290 |
| 4. 2.2 குறுங்காலக் கொடுகடன்கள் .. | 10,966 | 10,504 | 14,172 | 485 | 459 | 564 |
| 4. 2.3 நிரம்பலர் கொடுகடன்களும் ஏனைய நீண்டகாலக் கடன்களும் | 785 | 4,284 | 2,602 | 35 | 186 | 102 |
| 4. 2.4 வர்த்தகக் கடன்பாடுகள் (தனியார் துறை) ... | 1,546 | 1,585 | 1,872 | 68 | 69 | 74 |
| 4. 2.5 வங்கிக் கடன்பாடுகள் ... | — | 1,595 | 30 | — | 68 | — |
| 4. 2.6 இருபுடை நிலுவைகள் .. | — | — | — | — | — | — |
| 4. 2.7 ப.நா.நி. எடுப்பனவுகள் .. | 4,528 | 1,369 | 1,623 | 194 | 39 | 47 |
| 4. 2.8 ஏனையவை ... | 142 | 1,071 | 1,252 | 5 | 46 | 41 |
| 4. 2.9 ஒதுக்குகள் ... | — 2,456 | — 1,734 | — 1,746 | — 91 | — 79 | — 20 |
| 5. பெறுமதிச் சீராக்கங்கள் ... | — **39** | — **124** | + **81** | — | — | — |
| 6. பிழைகளும் தவறுகளும் .. | + **188** | + **81** | + **602** | + **2** | + **24** | + **17** |

அ. திருத்தப்பட்டது.
ஆ. தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தனியார் அரச துறைகளிலுள்ள நாணயமல்லா மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல்கள் 1982இன் ரூ. 108,130 இலட்சத்துடன் (சிஎஉ 4,710 இலட்சம்) ஒப்பிடுகையில் 1983இல் 107,970 இலட்சமாக (சிஎஉ 4,280 இலட்சம்) விளங்கியது. இது 1983இல் கிடைக்கக்கூடிய நிதியிடல் நிலையினைவிட (சிஎஉ நியதிகளில்) 9 சதவீதத்தால் குறைவானதாக விளங்கியது. எனினும் நாணயமல்லா மூலதனத்தின் உட்பாய்ச்சல்களின் குறைப்பு தனியார் துறைக்கு மட்டும் கட்டுப்படுத்தப்பட்டது கடந்த ஆண்டிற்கு மேலாக ஏற்பட்ட வீழ்ச்சியானது சிஎஉ 1,040 இலட்சமாக விளங்கி 1983இல் ரூ. 33,890 இலட்சத்திற்கு (சிஎஉ 1,360 இலட்சம்) வகை

கூறியது. அரசதுறை நாணயமல்லா மூலதனப் பாய்ச்சல்கள் இவ்விரு ஆண்டு களுக்குமிடையில் ரூ. 52,970 இலட்சத்திலிருந்து (சிஎஉ 2,310 இலட்சம்) ரூ. 74,080 இலட்சத்திற்கு (சிஎஉ 2,910 இலட்சம்) அதிகரித்தது.

தனியார் துறையிலான நாணயமல்லா மூலதன உட்பாய்ச்சல்களின் குறைப் பானது முக்கியமாக கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு, வெளி நாட்டு முதலீட்டு மதியுரைக்குழு ஆகியவற்றிற்கு உட்பட்ட தொழில் முயற்சி கள் வரையறுக்கப்பட்ட எயர் லங்கா, இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனம் ஆகிய வற்றின் தேறிய வெளிநாட்டுக் கடன் பகிர்ந்தளிப்புக்களில் ஏற்பட்ட கணிச மான குறைப்பினுல் ஏற்பட்டது. கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக் குழு வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழு ஆகியவற்றின் நேரடி முதலீடுகள் 1982இன் ரூ. 13,770 இலட்சத்திற்கு (சிஎஉ 600 இலட்சம்) எதிராக 1983இல் ரூ. 9,270 இலட்சமாக (சிஎஉ 370 இலட்சம்) விளங்கியது. எயர் லங்கா நிறுவ னத்தின் வெளிநாட்டுக் கடன்களின் தேறிய பகிர்ந்தளிப்புக்கள் கடந்த ஆண்டின் ரூ. 29,800 இலட்சத்திற்கு (சிஎஉ 1,300 இலட்சம்) எதிராக 1983இல் ரூ. 4.790 இலட்சமாக (சிஎஉ 190 இலட்சம்) விளங்கியது. தனியார் துறையிலிருந்தான நீண்டகால நாணயமல்லா மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல்கள் முக்கியமாக நிரம்பலர் கொடுகடனையும், ஏனைய வர்த்தக கடன்பாடுகளையும் கொண் டிருந்து 1983இல் ரூ. 12,640 இலட்சமாக (சிஎஉ 500 இலட்சம்) விளங்கி 8 சத வீத அதிகரிப்பினைச் சுட்டிக் காட்டியது. சென்மதி நிலுவைகளை நிதியீட்டப் பயன்படுத்தப்பட்ட குறுங்காலக் கொடுகடன்கள் (தேறிய) 1982இன் ரூ. 1,470 இலட்சத் (சிஎஉ 70 இலட்சம்) திலிருந்து 1983இல் ரூ. 7,540 இலட்சத்திற்கு (சிஎஉ 320 இலட்சம்) அதிகரித்திருந்தது. அரச துறைக்கான நாணயமல்லா மூலதன உட்பாய்ச்சல்களின் அதிகரிப்பு, செயற்றிட்டக் கடன்கள், பண்டக் கடன் களின் அதிகரித்த பகிர்ந்தளிப்புக்களின் விளைவாக முறையே ரூ. 37,860 இலட்சத் (சிஎஉ 1,660 இலட்சம்) திலிருந்து ரூ. 53,840 இலட்சத்திற்கும் (சிஎஉ 2,130 இலட்சம்) ரூ. 11,110 இலட்சத்திலிருந்து (சிஎஉ 480 இலட்சம்) ரூ. 13,380 இலட்சத்திற்கும் (சிஎஉ 530 இலட்சம்) அதிகரித்தன.

1983இல் அரசினுல் பயன்படுத்தப்பட்ட வர்த்தகக் கடன்பாடுகள் யூரோ நாணயக் கடனென்றிற்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டு ரூ. 6,070 இலட்சத் திற்கு (சிஎஉ 240 இலட்சம்) வகை கூறியது. சென்மதி நிலுவை நிலையில் ஏற் பட்ட வரவேற்கத் தக்கதோர் அபிவிருத்தியானது வர்த்தகக் கொடுகடன்களைக் குறைந்தளவில் நாடியமையினுல் கடந்த ஆண்டில் இருந்ததைவிட ஏறத்தாழ அரைப்பங்கிற்கு வீழ்ச்சியடைந்தமையினுல் ஏற்பட்டதாகும். நடைமுறையில் இருக் கும் அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் கடன் தீர்ப்பனவுகளும் முற்பணக் கொடுப் பனவுகளும் இவ்வாண்டுக் காலத்தில் 1982இன் ரூ. 15,170 இலட்சத்துடன் (சிஎஉ 670 இலட்சம்) ஒப்பிடுகையில் ரூ. 18,470 இலட்சமாக (சிஎஉ 740 இலட்சம்) விளங் கின. இதன் விளைவாக அரசதுறை மூலதன பாய்ச்சல்களின் வடிவில் சென்மதி நிலுவைக் குறைக்கு நிதியீட்டுவதற்காக கிடைக்கக் கூடிய தாயிருந்தநிதியீட்டற் தொகை 1983 இல் 26 சதவீதத்தால் அதிகரித்தது.

1983 இல் சென்மதி நிலுவைக்குறையினை நிதியிடுவதற்காக, பன்னாட்டு நாணய நிதியிலிருந்து கிடைக்கக்கூடியதான மூலவளங்கள் ரூ. 8,800 இலட்சமாக (சிஎஉ 360 இலட்சம்) விளங்கி, தாங்கிருப்பு நிதியிடல் வசதி (இறப்பர்)யின் கீழ் ரூ. 1,360 இலட்சம் (சிஎஉ 60 இலட்சம்) கொண்ட கொள்வனவையும், துணைநில் ஒழுங்குகளின் கீழான முதல் இரண்டு எடுப்பனவுகளின் மொத்தத் தொகையான ரூ. 7,450 இலட்சத்தையும் (சிஎஉ 300 இலட்சம்) கொண்டிருந்தது. அத்துடன் இலங்கைக்கான பன்னாட்டு நாணய நிதியத்திலான ஒதுக்கின் நிலைமையும் ரூ. 2,770 இலட்சத்தினுல் (சிஎஉ 110இலட்சம்) அதிகரித்து இலங்கையின் அனுமதிப்பங்கின் அதிகரித்ததன்மையின் காரணமாக சிஎஉ நியதிகளிலான உதவுதொகை கொடுப்பனவுகளில் பிரதிபலிக்கப்பட்டது. பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான முன்னைய எடுப்பனவுகள் தொடர்பானமீளக்கொடுப்பனவுகள் 1983 இல் ரூ. 10,970 இலட்சத்திற்கு (சிஎஉ 460 இலட்சம்)வகைகூறியது.

**வெளிநாட்டுச் சொத்துக்கள்**

இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1982 இன் ரூ. 110,940 இலட்சத்திலிருந்து (சிஎஉ 4,720 இலட்சம்) 1983 இல் ரூ. 128,400 இலட்சமாக (சிஎஉ 4,910 இலட்சம்) அதிகரித்திருந்த வேளையில், தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் ஒரே மட்டத்திலேயே இருந்தன. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் நிலையின் அபிவிருத்தியானது வெளிநாட்டுத் திரவநிலுவைகளின் ஒன்று திரட்டலினதும், கழிவு செய்யப்பட்ட ஏற்றுமதி உண்டியல்களின் விளைவாக வர்த்தக வங்கிகளில் வெளிநாட்டுச்சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பினதும் பெருமளவு விளைவாகும்.


மத்திய, வர்த்தக வங்கிகள், அரச, அரச முகவர்களின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் முறையே ரூ.77,040 இலட்சம் (சிஎஉ 2,950 இலட்சம்) ரூ. 51,260 இலட்சம் (சிஎஉ 1,960 இலட்சம்) ரூ. 100 இலட்சம் (சிஎஉ 4 இலட்சம்) ஆகவிருந்தன. கடந்த ஆண்டின் முடிவில் இதுதொடர்பான எண்தொகைகள் முறையே ரூ. 72,340 இலட்சம் (சிஎஉ 3,080 இலட்சம்) ரூ. 35,850 இலட்சம் (சிஎஉ 1,520 இலட்சம்) ரூ. 2,760 இலட்சம் (சிஎஉ 120 இலட்சம்) ஆக விளங்கின. 1983 முடிவிலான மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டமானது 1984 ஆம் ஆண்டின் 3 மாதங்களுக்காக திட்டமிடப்பட்ட இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தது.

**செலாவணி வீத அசைவுகள்**

1983 இல் உலகின் முதன்மை நாணயங்களுடன் தொடர்பான வகையில் இலங்கை ரூபாவின் அசைவுகள் பற்றிய பகுப்பாய்வொன்று இலங்கை ரூபா பிராங்கு தவிர்ந்த எல்லா முதன்மை நாணயங்களுக்கும் எதிராக குறைப்பு செய்யப்பட்டுள்ளதைக் காட்டுகின்றது. ரூபாவானது ஐ. அ. டொலருக்கு எதிராக 14.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 1977 ஆம் ஆண்டின் நவெம்பர் 16 ஆம் நாளிலிருந்து 36 சதவீதங்கொண்ட ஒன்றுசேர்ந்த குறைப்பினை எடுத்துக்காட்டியது. இலங்கை ரூபா மேலும் யப்பானிய யென்னுக்கெதிராக 14.8 சதவீதத்தாலும் இந்தியா ரூபாவுக்கெதிராக 8.2 சதவீதத்தாலும் ஐக்கிய இராச்சியம் ஸ்டேர்லிங் பவுணுக்கெதிராகவும், டியூச் மார்க்கிற்கெதிராகவும் 3.6 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தவேளையில் பிரான்சிய பிராங்கிற்கு எதிராக 6.7 சதவீதத்தால் உயர்

## வெளிநாட்டுச் சொத்துக்கள்


காலாண்டு தோறும்




இலங்கை மத்திய வங்கி

## செலாவணி வீதங்கள்

*1977 நவெம்பர் 16ம் நாள் தொடக்கம் மொத்தச் சதவீத மாற்றங்கள்*




இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: நவெம்பரிலும் திசெம்பரிலும் செலாவணி வீதங்களிலேற்பட்ட மாற்றங்கள் 1977இல் காட்டப்பட்டுள்ளன. ஏனைய ஆண்டுகளின் மாற்றங்கள் காலாண்டு அடிப்படையில் காட்டப்பட்டுள்ளன.

வடைந்தது. இலங்கை ரூபாவின் ஒன்றுசேர்ந்த குறைப்பானது யப்பானிய யென், இந்திய ரூபா, ஐக்கிய இராச்சிய ஸ்டேர்லிங் பவுண், டியூச் மார்க் ஆகியவற்றிற்கு எதிராக 1977 நவெம்பர் 16 ம் நாளிலிருந்து முறையே 39.1 சதவீதம், 21.3 சத வீதம், 19.1 சதவீதம், 22 சதவீதமாகவும் இருந்தவேளையில் பிரான்சிய பிராங்கிற்கு எதிராக 10.5 சதவீதங்கொண்ட ஒன்றுசேர்ந்த உயர்வைக்காட்டியது. இவ்வாண்டுக்காலத்தில் ரூபாவானது சிஎஉ வுக்கு எதிராக 9.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 1977 நவெம்பர் 16 ஆம் நாளிலிருந்தான முழுமையான தேய்வை 1983 முடிவில் 27.7 சதவீதந்திற்கு அதிகரித்தது.

அட்டவணை 1.44

**செலாவணி வீத அசைவுகள் (அ) 1981 — 1983**

| நாணயம் | ஆண்டு இறுதி செலாவணி வீதங்கள் அலகொன்றுக்கு | | | முந்திய ஆண்டிற்கு மேலான % மாற்றம் (ஆ) | |
|---|---|---|---|---|---|
| | 1981 | 1982 | 1983 | 1982 | 1983 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் ... | 23.8738 | 23.5569 | 26.1260 | (1.34) | 9.83 |
| ஐ. அ. டொலர் ... | 20.5500 | 21.3200 | 25.0000 | 3.61 | 14.72 |
| பவுண் ஸ்டேர்லிங் ... | 39.0965 | 34.6130 | 35.8938 | (12.95) | 3.57 |
| டியூச் மார்க் ... | 9.0665 | 8.9806 | 9.1050 | (0.95) | 1.37 |
| யப்பானிய யென் ... | 0.09330 | 0.09123 | 0.10712 | (2.27) | 14.83 |
| பிரான்சிய பிராங்கு ... | 3.5800 | 3.1726 | 2.9744 | (12.84) | (6.66) |
| இந்திய ரூபாய் ... | 2.2063 | 2.1597 | 2.3531 | (2.16) | 8.22 |

(அ) அடைப்புக் குறிக்குள் இருக்கும் எண்கள் இலங்கை ரூபாவின் உயர்வைக் காட்டுகின்றன.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(ஆ) மாற்றங்கள் இலங்கை ரூபாவின் சமனுக வெளிநாட்டு நாணயத்தின் அடிப்படையில் கணிக்கப் பட்டன.

**வெளிநாட்டுப்படுகடன்**

நீண்டகால, நடுத்தரகால படுகடன் அரசதுறையில் நிரம்பலர் கொடுகடன் (அரச கூட்டுத்தாபனங்கள் உட்பட) அரச கூட்டுத்தாபனங்களினதும், எயர்லங்காவினதும், வர்த்தகக் கடன்பாடுகள் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவினதும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முயற்சிகளினதும் வெளிநாட்டு நாணயவங்கித்தொழில் பிரிவிலிருந்தான கடன்பாடுகள் தனியார் வெளிநாட்டு கடன்பாடுகள், வர்த்தகக்கொடுகடன்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய இலங்கையின் மொத்த வெளிநிற்கும் வெளிநாட்டுப்படுகடன் 1982 இல் ரூ. 537,370 இலட்சத்துடன் (சிஎஉ 22,860 இலட்சம்) ஒப்பிடுகையில் ரூ. 691,220 இலட்சமாக (சிஎஉ 26,510 இலட்சம்) விளங்கின. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ. 153,850 (சிஎஉ 3,640) இலட்சங் கொண்ட அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றது.

அட்டவணை 1.45

**வெளி நின்ற வெளிநாட்டுப் படுகடன் 1979 — 1983**

ரூபா பத்து இலட்சம் (சிஎஉ பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| வகை | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 |
|---|---|---|---|---|---|
| 1. நீண்டகால படுகடன் இதில் ... | 15,840.6 (778.6) | 22,276.8 (973.6) | 29,172.1 (1,219.6) | 34,597.3 (1,471.1) | 46,221.5 (1,765.9) |
| 1.1 செயற்றிட்டக் கடன்கள் ... | 5,062.6 (248.8) | 6,784.3 (296.5) | 9,232.7 (386.0) | 12,451.8 (529.5) | 19,531.0 (746.2) |
| 1.2 செயற்றிட்ட மல்லாக் கடன்கள் | 9,407.8 (462.4) | 13,305.5 (581.5) | 17,433.3 (728.8) | 19,545.6 (831.1) | 23,686.8 (905.0) |
| 1.3 ப.நா.நி. பொறுப்பாண்மை நிதியக் கடன்கள் ... | 1,370 2 (67.4) | 2,187.0 (95.6) | 2,506.1 (104.8) | 2,599.9 (110.5) | 3,003.7 (114.7) |
| 2. நிரம்பலர் கொடுகடன்கள் ... | 828.6 (40.7) | 787.6 (34.4) | 1,110.4 (46.4) | 996.6 (42.4) | 920.7 (35.2) |
| 3. ப.நா.நி. எடுப்பனவுகள் ... | 2,501.2 (126.2) | 2,334.8 (112.6) | 5,319.3 (241.9) | 5,088.7 (217.8) | 4,870.3 (196.0) |
| 4. வங்கிக் கடன்பாடுகள் ... | 69.1 (3.4) | 428.6 (18.7) | 266.9 (11.2) | 1,851.2 (78.7) | 1,873.1 (71.6) |
| 5. ஏனையவை (அ) ... | 39.7 (2.0) | 4,231.5 (184.9) | 6,639.2 (277.6) | 11,203.0 (476.4) | 15,235.9 (582.1) |
| மொத்தம் . | 19,279.2 (950.9) | 30,059.3 (1,324.2) | 42,507.9 (1,796.7) | 53,736.8 (2.286.4) | 69,121.5 (2.650.8) |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) அரச கூட்டுத்தாபனங்கள், எயர்லங்கா ஆகியவற்றின் வர்த்தகக் கடன்பாடுகள், வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவகளிலிருந்தான கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவினதும் ஏனைய ஒப்புதலளிக்கப்பட்ட தொழில் மூலங்களினதும் கடன்பாடுகள், தனிப்பட்ட வெளிநாட்டுக் கடன்பாடுகள், வர்த்தகக் கொடுகடன்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

மத்திய அரசின் நீண்டகால, நடுத்தரக்காலக்கடன்கள் இவ்வாண்டுக்காலத்தில் 20 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு செயற்றிட்டக்கடன்களின் கீழான பகிர்ந்தளிப்புக்களில் ஏற்பட்ட 41 சதவீத தேறிய அதிகரிப்பும் செயற்றிட்டமல்லாக் கடன்களின் கீழான பகிர்ந்தளிப்புக்களில் ஏற்பட்ட 9 சதவீத அதிகரிப்பும் பெருமளவுக்கு பொறுப்பாகவிருந்தன. இந்த வகையிலான நீண்டகால, நடுத்தர கால கடன்கள் 1983 ஆம் ஆண்டின் மொத்த வெளிநின்ற அரச படுகடனின் 67 சதவீதத்திற்கு வகைகூறியது. பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான வெளிநின்ற எடுப்பனவுகள் 1982 இன் ரூ. 50,890 இலட்சத்திலிருந்து (சிஎஉ 2.180 இலட்சம்) 1983 இல் ரூ. 48 700 இலட்சத்திற்கு (சிஎஉ 1,960 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது. அரசதுறை நிரம்பலர் கொடுகடனின் வெளிநின்ற தொகைகளும், வெளிநாட்டிலிருந்தான வங்கிக்கடன்பாடுகளும் இவ்வாண்டுக்காலத்தில் முறையே 17 சதவீதத்தாலும், 9 சதவீதத்தாலும் குறைவடைந்தன. ஏனைய மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப்படுகடன் 1982 இன் ரூ. 112,030 இலட்சத்திலிருந்து (சிஎஉ 4,764 இலட்சம்) 1983 இல் ரூ. 152,360 இலட்ச (சிஎஉ 5,820 இலட்சம்)மாக அதிகரித்தது.

**படுகடன் பணிக்கொடுப்பனவுகள்**

நீண்டகால, நடுத்தரகால கடன்களின் தீர்ப்பனவினுல் செய்யப்பட்ட படுகடன் பணிக்கொடுப்பனவுகள் நீண்டகால, நடுத்தர, குறுங்கால வெளிநாட்டுக்கடன்கள் தொடர்பான வட்டிக்கொடுப்பனவுகள் ரூ. 52.920 இலட்சத்திலிருந்து (சிஎஉ 2,310 இலட்சம்) 1983 இல் ரூ. 70,940 இலட்சமாக (சிஎஉ 2,850 இலட்சம்) அதிகரித்தது. 1981 ஆம் ஆண்டிற்கு முந்திய காலத்தில் குறுங்காலக் கடன்கள் தொடர்பான படுகடன் பணிக்கொடுப்பனவு பற்றிய தரவுகள் போதியளவு தகவல்கள் கிடைக்கப்பெறுமையினுல் அந்த அட்டவணையில் இடம்பெறவில்லை. இதே காரணத்திற்காக கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு தொழில்முயற்சிக்கான வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவுக்கடன்கள் தொடர்பான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளும் இனங்காணப்பட முடியாத வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவுக்கடன்களும் உள்ளடக்கப்படவில்லை. எனினும் இந்தக்கடன்கள் மீதான

வட்டிக்கொடுப்பனவுகள் படுகடன் பணி விகிதத்தைக் கணிப்பதில் உள்ளடக்கப் படுகின்றன. மீள்கொள்வனவுகளும் பன்னாட்டு நாணய நிதியத்திற்கான வட்டிக் கொடுப்பனவுகளும் சேர்ந்து கடந்த ஆண்டின் ரூ. 16,660 இலட்சத் (சிஎஉ 720 இலட்சம்) துடன் ஒப்பிடுகையில் 1983 இல் ரூ. 18.470 இலட்சத்துக்கு (சிஎஉ 770 இலட்சம்) வகைகூறியது பன்னாட்டு நாணய நிதியக்கொடுக்கல்வாங்கல்கள் உட்பட மொத்தப்படுகடன் பணிக்கொடுப்பனவுகளின் விகிதமாக வணிகத்துறை ஏற்றுமதி களிலும் பணிகளிலும் இருந்தான வருவாய்கள் 1982 இன் 18.9 சதவீதத்திலிருந்து 1983 இல் 21.6 சதவீதமாக அதிகரித்தவேளையில் பன்னாட்டு நாணய நிதியக் கொடுக்கல்வாங்கல்கள் புற நீங்கலான விகிதம் இவ்விரு ஆண்டுகளுக்கு இடை யில் 12.9 சதவீதத்திலிருந்து 16.0 சவீதமாக அதிகரித்தது. மொத்தப்படுகடன் பணிகள் கொடுப்பனவுகளில் வணிகத்துறை ஒற்றுமதிகள் பணிகள், தொழில்புரி வோர் பணவனுப்பல்கள் மூலமாக வெளிநாட்டிலிருந்தான பெறுகைகளின் சத வீதம் 1982ஆம் ஆண்டின் 15.5 சதவீதத்திற்கு எதிராக 1983 இல் 17.9 சதவீத மாக விளங்கியது.

### அட்டவணை 1.46

### படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

பத்து இலட்சம் ரூபாய்கள் (சிஎஉ பத்து இலட்சம்அடைப்புக் குறிக்குள்)

| விடயம் | 1979 | 1980 | 1981 (அ) | 1982(அ) | 1983(ஆ) |
|---|---|---|---|---|---|
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ... | 2,383.1 | 2,762.8 | 4,449.7 | 5,291.7 | 7,093.8 |
| | (118.0) | 137.0) | '(197.4) | (230.7) | (285.3) |
| 1.1 கடன் திர்ப்பனவுகள் ... | 1,627.4 | 1,781.5 | 2,084.1 | 2,563.3 | 3,131.3 |
| | (80.8) | (91.4) | (93.8) | (112.0) | (126.9) |
| (i) பன்னாட்டு நாணய நிதியத்திற்கு ... | 622.6 | 748.5 | 1,289.2 | 1,146.3 | 1,097.3 |
| | (30.9) | (43.4) | (59.1) | (49.9) | (46.2) |
| (ii) ஏனையவற்றிற்கு(இ) ... | 1,004.8 | 1,033.0 | 794.9 | 1,417.0 | 2,034.0 |
| | (49.9) | (48.0) | (34.7) | (62.1) | (80.7) |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் .. | 755.7 | 981.3 | 2,365.6 | 2,728.4 | 3,962.5 |
| | (37.2) | (45.6) | (103.6) | (118.7) | (158.4) |
| (i) பன்னாட்டு நாணய நிதியத்திற்கு | 170.0 | 345.6 | 487.6 | 519.5 | 749.3 |
| | (8.4) | (12.4) | (21.7) | (22.4) | (30.8) |
| (ii) ஏனையவற்றிற்கு ... | 585.7 | 635.7 | 1,878.0 | 2,208.9 | 3,213.2 |
| | (28.8) | (33.2) | (81.9) | (96.3) | (127.6) |
| 2. வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளின தும் பணிகளிலிருந்துமான வருவாய்கள் | 18,274.7 | 22,207.8 | 26,526.1 | 28 059.8 | 32,875.1 |
| | (907.7) | (1,032.0) | (1,168.2) | (1,221.7) | (1,305.2) |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், பணிகளிலிருந்தான பெறுகைகளும் தனியார் மாற்றல்களும் | 19,210.1 | 24,725.8 | 30,955.9 | 34,083.5 | 39,732.0 |
| | (954.0) | (1,149.0) | (1,363.3) | (1,484.1) | (1,578.0) |
| 4. படுகடன் பணி வீகிதம் (ஈ) (2இன் சதவீதமாக) | | | | | |
| (i) முழு மொத்த வீகிதம் ... | 13.0 | 12.4 | 16.8 | 18.9 | 21.6 |
| (ii) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல் தவிர்ந்த ... | 8.7 | 7.5 | 10.1 | 12.9 | 16.0 |
| 5. படுகடன் பணி விகிதங்கள் (ஈ) (3இன் சதவீதமாக) | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் ... | 12.4 | 11.2 | 14.4 | 15.5 | 17.9 |
| (ii) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல் தவிர்ந்த ... | 8.3 | 6.7 | 8.6 | 10.6 | 13.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டவை

(ஆ) தற்காலிகமானவை

(இ) தகவல்கள் கிடைக்கப் பெறாமையினால் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு முயற்சி களுக்கான வெளிநாட்டு வங்கிப் பிரிவுக் கடன்கள் தொடர்பான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவு களும் ஏனைய ஒப்புதல் அளிக்கப்பட்ட முயற்சிகளுக்கான வெளிநாட்டு வங்கிப் பிரிவுக் கடன்களும் இங்கு உள்ளடக்கப்படவில்லை.

(ஈ) ரூபாப் பெறுமதிகளைப் பயன்படுத்தி கணிக்கப்பட்டது. சிஎஉ பெறுமதிகளைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களின் மாற்றங்களி னால் இவ் விகிதங்களிலிருந்து வேறுபடலாம்.